# இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)

## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்

**06 மே 2016 / 28 ரஜப் 1437**

## மற்றவர்களுடன் நல்ல உறவுகளை வளர்த்துக் கொள்வது

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும், அவனால் தடுக்கப்பட்ட அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" (பக்தி) வின் உணர்வை உச்சகட்டமாக ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கும் நமது குடும்பத்தார்களுக்கும் உறுதியான "ஈமான்" (ஓரிறை நம்பிக்கை) மற்றும் "தக்வா" (பக்தியை) வழங்கி அருள் புரிவானாக! இன்ஷாஅல்லாஹ்.

ஜமாஅத்தார்களே!

”அல்-அலக்” எனும் அத்தியாயத்தின் மூலம் நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களுக்கு இஸ்லாத்தின் தூது அருளப்பட்ட போது, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் ஓதும் படிக் கட்டளையிடப்பட்டார்கள். அவ்வாறு ஓதுங்கள்! என அவர்கள் கட்டளையிடப்பட்ட போது வெறுமனே ஓதுங்கள் என்பது பொருளாக இருக்கவில்லை. இரண்டு விஷயங்களை அறிந்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டார்கள். ஒன்று, அல்லாஹ்வினால் எழுதப்பட்ட புத்தகம். இதற்கு அரபியில் ”மஸ்தூர்” எனப்படுகிறது. இரண்டாவது, நாம் தற்போது பார்க்கின்ற குர்ஆன் எனும் நூல். இதற்கு ”மன்ஜுர்” எனப்படுகிறது.

எழுதப்பட்ட நூலாகிய ”மஸ்தூர்” என்பதை, திருக்குர்ஆனை ஓதுவதின் மூலமாக ஓதிட முடியும். ஆனால், இன்று நாம் காணும் திருக்குர்ஆனை (மன்ஜூர்), உலகில், அல்லாஹ்வின் படைப்புகளில் காணப்படும் மகிமையை ஆய்வு செய்வதன் மூலமாகவும், இவ்வுலகில் நடைபெற்று வரும் விஷயங்களின் பின்ணணியில் உள்ள காரணங்களை அறிந்து கொள்வதன் மூலமாகவும் புரிந்து கொள்ள முடியும். நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் இரண்டு அம்சங்களையும் நன்கு அறிந்திருந்தார்கள்.

நாம் இன்று காணக்கூடிய திருக்குர்ஆன், தொடர்ந்து ஆய்வு செய்யுமாறு நம்மை ஆர்வப்படுத்துகிறது. ஆய்வின் மூலம நாம் கற்றுக் கொள்ளும் விஷயங்களை நமது அன்றாட வாழ்வில் செயல்படுத்துவது அவசியமாகும். அவ்வாறு செய்தால், நமது வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் பலவிதமான சோதனைகள் மற்றும் சவால்களை நாம் எதிர்கொள்வதற்கு

அது உதவியாக இருக்கும். நாம் இன்று பார்க்கின்ற நூலாகிய திருக்குர்ஆனை எப்படி ஓத வேண்டும் என்பதை திருக்குர்ஆனின் "அல்-ஃபாதிர்" எனும் அத்தியாயத்தின் 27-28 வரையிலான வசனங்களில் அல்லாஹ் பின்வருமாறு விளக்குகிறான்:

أَلَمْ تَرَ أَنَّ اللَّهَ أَنزَلَ مِنَ السَّمَاءِ مَاءً فَأَخْرَجْنَا بِهِ ثَمَرَاتٍ مُّخْتَلِفًا أَلْوَانُهَا ۚ وَمِنَ الْجِبَالِ جُدَدٌ بِيضٌ وَحُمْرٌ مُّخْتَلِفٌ أَلْوَانُهَا وَغَرَابِيبُ سُودٌ وَمِنَ النَّاسِ وَالدَّوَابِّ وَالْأَنْعَامِ مُخْتَلِفٌ أَلْوَانُهُ كَذَٰلِكَ ۗ إِنَّمَا يَخْشَى اللَّهَ مِنْ عِبَادِهِ الْعُلَمَاءُ ۗ إِنَّ اللَّهَ عَزِيزٌ غَفُورٌ

பொருள்: நிச்சயமாக அல்லாஹ் வானத்திலிருந்து மழையை இறக்குவதை நீர் பார்க்கவில்லையா? பின்னர் நாமே அதனைக் கொண்டு பல விதமான நிறங்களுடைய கனிகளை வெளியாக்கினோம். மலைகளிலிருந்து வெண்மையானதும், சிவந்ததும், தன் நிறங்கள் பற்பல விதமானவையான பாதைகளும் சுத்தக் கரிய நிறமுடையவும் உள்ளன. இவ்வாறே மனிதர்களிலும், ஊர்வனவற்றிலும், கால் நடைகளிலும், பல நிறங்கள் இருக்கின்றன; நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்கு அஞ்சுவோரெல்லாம் - ஆலிம்கள் (அறிஞர்கள்) தாம். நிச்சயமாக அல்லாஹ் யாவரையும் மிகைத்தவன்; மிக மன்னிப்பவன்.

தற்போது உங்களுக்கு முன்பாக ஓதிக் காண்பிக்கப்பட்ட வசனங்களை ஆழமாக ஆய்வு செய்து பார்த்தால், அல்லாஹ்வின் மகிமையைப்

பற்றியும், ஒவ்வொரு பொருளையும் அல்லாஹ் எவ்வளவு அழகாகப் படைத்துள்ளான் என்பதைப் பற்றியும் சிந்திக்குமாறு நமது உள்ளங்களை நிச்சயம் அவை தூண்டும்.

மேற்கண்ட வசனங்களில், அல்லாஹ் பல முக்கிய விஷயங்களை விளக்குகிறான். மனிதகுலத்தை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா பல தோற்றங்களில், பல நிறங்களில், பல இனத்தவர்களாக, பல மொழிகளைப் பேசுபவர்களாக எவ்வாறு படைத்துள்ளான் என்பதை விளக்குகிறான். இந்த வித்தியாசங்களையெல்லாம் காணுகின்ற நம்மில் சிலர், மற்றவர்களுடன் பழகும் போது மற்றொரு அம்சத்தையும் கவனிக்கத் தவறி விடுகிறார்கள். அது தான், மக்களிடம் காணப்படும் பலவிதமான நம்பிக்கைகளும் கொள்கைகளும் ஆகும்.

இந்த அம்சத்தை, இயற்கை மற்றும் சமூக நிகழ்வுகளைப் பற்றிய ஞானம் படைத்தவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். எனவே தான் அவர்களால் வாழ்க்கையின் எதார்த்த நிலையையும், பன்முகத்தன்மை யையும் ஏற்று, இணக்கமாக வாழ முடிகிறது.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!
உலக அளவிலான தற்கால சூழ்நிலைகள் உள்ளத்தைப் பிளப்பதாக உள்ளன. நிலையற்ற அரசியல் சூழ்நிலை, நிச்சயமற்ற, மந்தமான பொருளாதார நிலை, உலகின் பல பகுதிகளில் நடைபெற்று வரும் மனிதத் தன்மையற்ற போர்கள் ஆகியவை உள்ளத்தைப் பதற வைக்கின்றன. இவையெல்லாம், அல்லாஹ்வின் ஒரு மகிமையை மக்கள் அறிந்து கொள்ள முடியாமல் அவர்களைத் திசைதிருப்புவதாக உள்ளன. அந்த

மகிமை தான், மனித சமுதாயத்தவரிடம் காணப்படும் வித்தியாசமான நிலைகளாகும். சிங்கப்பூருக்கு வெளியில் நடைபெறும் சம்பவங்கள் சிங்கப்பூர் முஸ்லிம்களின் அன்றாட வாழ்வில், சமூகம், உணர்வு, ஆன்மீகம் மற்றும் மதம் போன்ற பல ரீதியில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

ஜமாஅத்தார்களே!

திருக்குர்ஆனின் "அல்-அலக்" எனும் அத்தியாயத்தில், எவ்வாறு ஓத வேண்டும் என ரசூலுல்லாஹி(ஸல்) கட்டளையிடப்பட்டார்களோ அவ்வாறே, நாமும் அவர்களின் சமுதாய மக்கள் எனும் ரீதியில் திருக்குர்ஆனை ஓதக் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறு நாம் ஓதினால், மற்ற நம்பிக்கைகளைக் கொண்டுள்ள மக்கள் மற்றும் சக முஸ்லிம்களுடனான நமது அணுகுமுறைகளும் செயல்பாடுகளும் நன்றாக அமைந்து விடும். நாம் நேர்வழி பெற்றவர்களாகவும் கவனமிக்க வர்களாகவும் இருந்தால் நமது சமுதாயம் ஒன்றுபட்டு உறுதியாகத் திகழும். நமது உள்ளங்களில் வெறுப்பு, கோபம் மற்றும் உணர்ச்சிகள் குடிகொண்டு விடுமாயின், கருணைச் சிந்தனைகள் நமது உள்ளங்களை விட்டும் அகன்று விடும். அந்நிலையில் நமது சமுதாயத்துக்கு மிகப் பெரிய அளவில் நஷ்டம் ஏற்படும்.

ஒரு பன்முகத்தன்மை கொண்ட சமுதாயமாகிறது, பல நிறங்களைக் கொண்ட வெள்ளை ஆடையைப் போன்றதாகும். பார்ப்பவர்களை அது கவர்ந்திழுக்கும். எனினும், அந்த ஆடைக்கு நிறம் கொடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். காரணம், அது உணர்ச்சி வசப்பட முடிகின்ற விஷயமாகும். ஏதாவது ஒரு நிறத்துக்கு முக்கியத்துவம்

கொடுக்கப்பட்டால் அது மற்ற நிறங்களை மூழ்கடித்து விடும். அதன் காரணமாக நிறம் கொடுப்பதால் ஏற்படும் அழகு அழிந்து விடும். நிறம் கொடுக்கப்பட்ட துணி பாதுகாக்கப்படவில்லையெனில் அதுவும் நிறமும் அழிந்து விடும். நிறம் கொடுக்கப்பட்டத் துணி சிங்கப்பூராகவும், நிறங்கள் சிங்கப்பூர் மக்களாகவும் உள்ளார்கள்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

**يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُمْ مِنْ ذَكَرٍ وَأُنْثَى وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ لِتَعَارَفُوا إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللَّهِ أَتْقَاكُمْ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ**

பொருள்: மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன். (அத்தியாயம்: அல்-ஹுஜுராத், வசனம்: 13)

மேற்கண்ட வசனத்தின் மூலம் அல்லாஹ் நமக்கு மூன்று பாடங்களைப் போதிக்கின்றான். முதலாவதாக, மனிதகுலம் அனைவரும் ஒரே

மூலத்திலிருந்து தான் படைக்கப்பட்டுள்ளார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்குமாறு கூறுகின்றான். இதன் அடிப்படையில், நாம் அனைவரும் - விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்- இயற்கையில் சகோதர, சகோதரிகளாக இருக்கின்றோம். எனவே, நாம் ஒருவர் மற்றவரைப் புரிந்து கொண்டு நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதுடன், ஒருவர் மற்றவர் மீது கிருபை காட்ட வேண்டுமெனவும் நினைவூட்டப்படுகிறோம். இரண்டாவதாக, மக்கள் பகைமை, வெறுப்புடன் காணப்படக் கூடாது எனவும் போதிக்கப்படுகிறார்கள். இறுதியாக, அல்லாஹ்வின் மீது "தக்வா" (பக்தி) கொண்ட அடியார்களாக ஆகுவதற்கு நாம் கடின முயற்சி செய்ய வேண்டுமெனவும் போதிக்கப்படுகிறோம்.

நம்மில் அதிக "தக்வா" (பக்திமிக்க) நபர்கள் யாரெனில், எவர்கள் மற்றவர்களுடன் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவும், மற்றவர்களுக்கு நன்மை செய்து, அவர்களுக்குப் பயனுள்ளவர்களாக இருப்பதற்கும் முயற்சிக்கின்றார்களோ அவர்கள் தான் எனவும் மேற்கண்ட வசனம் நமக்குப் போதிக்கிறது.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இவையெல்லாம், மனித உறவுகளைப் பற்றி இஸ்லாம் நமக்குப் போதிக்கும் பாடங்களாகும். நம்மைச் சுற்றிலும் நடைபெறும் சம்பவங்கள் நமக்குப் போதிக்கப்பட்டுள்ள சன்மார்க்க வழிகாட்டுதல்களுக்கு மாற்றமாக இருப்பதை நாம் கண்டால், அவற்றைச் செய்யக்கூடியவர்கள் தான் தவறிலும் குழப்பத்திலும் இருக்கின்றார்களே தவிர, இஸ்லாத்தில் எவ்வித தவறும் இல்லை என்பதை நாம் அறிய வேண்டும்.

நம்மைச் சுற்றிலும் காணப்படும் பன்முகத்தன்மையின் சிறப்பை அறிந்து, அதற்கு நன்றி செலுத்துபவர்களாக நாம் ஆகுவதற்கான தகுதியை எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு வழங்கி அருள் புரிவானாக! மேலும், இச்செய்திகளையெல்லாம் மனிதகுல நலனுக்காகவும், உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் நாம் பரப்புவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.